www.Padasalai.Net www.CBSEtips.in

# அரையாண்டு பொதுத் தேர்வு - 2022

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் : [ ][ ][ ][ ][ ][ ]

## தமிழ்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண் : 15)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும் கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடைகளையும் சேர்த்து எழுதவும். **15 x 1 = 15**

1. 'பெரிய மீசை' சிரித்தார். - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
   இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை
2. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' - என்னும் அடியில் 'பாக்கம்' என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) தேரூர் ஈ) சிற்றூர்
3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
4. அருந்துணை என்பதைப் பிரித்தால் ______.
   அ) அருமை + துணை ஆ) அரு + துணை
   இ) அருமை + இணை ஈ) அரு + இணை
5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசின் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
6. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ______.
   அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்
7. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
8. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். - இத்தொடருக்கான வினா எது?
   அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
   இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும், சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத் திட்டங்களைச் செயல்படுத்தல்
   அ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
10. வஞ்சிப்பாவுக்குரிய ஓசை ______.
    அ) அகவல் ஆ) துள்ளல் இ) செப்பல் ஈ) தூங்கல்
11. குறிஞ்சி நிலத்தின் சிறுபொழுது ______.
    அ) மாலை ஆ) வைகறை இ) யாமம் ஈ) நண்பகல்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

மையுடைய நெடு வரையே
மருளுடையன இளமான்களே
கயற்குலமே பிறழ்ந்தொழுகும்
கைத்தாயரே கடிந்தொறுப்பார்
இயற்புலவரே பொருள் வைப்பார்
இசைப்பாணரே கூடஞ்செய்வார்

12. இப்பாடலில் இடம் பெறும் அரசன் யார்?
    அ) கரிகால சோழன் ஆ) சேரன் செங்குட்டுவன்
    இ) இரண்டாம் இராசராச சோழன் ஈ) பாண்டிய நெடுஞ்செழியன்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13. எவற்றின் கண்கள் மருள்கின்றன?
அ) மீன் ஆ) பறவை இ) மான் ஈ) அன்னம்
14. கடிந்தொறுப்பார் - என்பது
அ) பண்புத்தொகை ஆ) உரிச்சொல்
இ) பெயரெச்சம் இ) உவமைத்தொகை
15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சீர்களை எடுத்தெழுதுக.

பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். (வினா எண் 21 கட்டாய வினா) 4 x 2 = 8

16. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
17. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
18. கம்பர் இயற்றிய நூல்கள் நான்கினை எழுதுக.
19. வசனக் கவிதை - குறிப்பு வரைக.
20. <u>நச்சப் படாதவன்</u> செல்வம் - அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.
21. 'குற்றம்' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க :
அ) விதி - வீதி ஆ) மலை - மாலை
23. தொடரைப் படித்து விடையை எழுதுக:
அ) நூலின் பயன் படித்தல் என்னில், கல்வியின் பயன் ________.
அ) கல், சிலை ஆகுமெனில், நெல் ________ ஆகும்.
(எழுத்து, கற்றல், சோறு)
24. தொழிற்பெயரின் பொருளைப் புரிந்துகொண்டு தொடரை முழுமை செய்க.
பொதுவாழ்வில் ________ கூடாது. ________ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது.
(நடிப்பு, நடித்தல்)
25. கூத்துக் கலைஞர் பாடத்தொடங்கினர். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
(கலவைச் சொற்றொடராக மாற்றுக)
26. கலைச்சொற்கள் தருக : அ) Cabinet ஆ) Myth

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளருக்கான மாற்று வினா :
ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக :
அ) திருநெல்வேலி ஆ) புதுச்சேரி

27. நான்கு வகைப் பாக்கள் யாவை?
28. ஒலித்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1 2 x 3 = 6

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

29. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
30. தாவரத்தின் அடிப் பகுதியைக் குறிக்கும் சொற்கள் மற்றும் பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனிகொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும், செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழர் மக்களின் கலை அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.

இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?

பிரிவு - 2 **2 x 3 = 6**

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.

32. "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக :

அ) 'மாற்றம்' - எனத்தொடங்கும் 'காலக்கணிதம்'

(அல்லது)

ஆ) 'புண்ணியர் புலவீர் யான்' - எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்

பிரிவு - 3 **2 x 3 = 6**

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

35. கீழ்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.

அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்

ஆ) அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள்

இ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்

36. தற்குறிப்பேற்றணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5 x 5 = 25**

38. அ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலி யை விவரிக்க.

(அல்லது)

அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) மின்வாரிய அலுவலருக்கு உங்கள் தெருவில் பழுதடைந்த மின் விளக்குகளைச் சரிபார்த்துத் தருமாறு கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



41. கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பிற்கான சேர்க்கை விண்ணப்பப்படிவத்தை நிரப்புக.

www.Padasalai.Net www.CBSEtips.in



42. அ) வானொலி அறிவிப்பு :
ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும், நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க :
Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :
உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக :

42. அ) தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது, வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தன்னைவிட வலிமை குறைந்தாரோடு, போர் செய்வது கூடாது என்பதை, ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

வினாக்கள்

1. போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?
2. புலவர் போர் அறம் குறித்து குறிப்பிடுவது யாது?
3. போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?
4. யாரிடம் போர் செய்வது கூடாது?
5. இக்கருத்தினைக் கூறும் புலவர் யார்?

பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்: 3 x 8 = 24

43. அ) விருந்தினர் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும். (அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக. (அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) குறிப்புகளை பயன்படுத்தி கட்டுரை ஒன்று தருக :
முன்னுரை - 'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு' - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - 'விபத்தினைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை (அல்லது)

அ) குமரிக் கடல் முனையையும், வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்தாப் புலவர்கள்.
இக்கருத்தினைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com